எம்.சி.ஓ.பி எண்: 2560/2024 தேதி: 13.08.2026

மசா. : 1

பெயர் : சவுண்டப்பன்

த/பெ. : மாதையசெட்டி

வயது : 52

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 31 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 16,17 ஆவணங்கள் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் என்மகன் ஓட்டிச்சென்ற இருசக்கரவாகனத்தில் 3 பேர் பயணம் செய்தார்கள். என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. அதை தாக்கல் செய்யவில்லை. விபத்து என் மகன் தவறான திசையில் வாகனத்தை திருப்பியதால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மகனின் கவனக்குறைவு, அஜாக்கிருதையால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் 3 பேர் இருசக்கரவாகனத்தில் சென்றதால் விபத்து நடந்து என்பதால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல. 3,4 மனுதாரர்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் 3 வது மனுதாரருக்கு திருமணம் ஆகிவிட்டது. 4 வது மனுதாரர் கல்லூாி படிப்பு படிக்கிறார். நான் கைத்தறி நெசவு கூலி வேலை செய்கிறேன். 1 ம் மனுதாரர் வேலை செய்யவில்லை. மனுதாரர்கள் அனைவரும் இறந்த என் மகனின் வருமானத்தை நம்பி வாழவில்லை என்றால் சரியல்ல. அவர் இறந்ததால் எனக்கு வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. மசாஆ 16,17 ஆவணத்தை வழங்கியவர்கள் அதை பற்றி சாட்சி சொன்னால்தான் ஏற்றுக்கொள்ளமுடியும் என்றால் சரியல்ல. என் மகன் இறப்பதற்கு முன்பு 01.12.2023 அன்று ரூபாய் 22,790/- அவருடைய வங்கி கணக்கில் சம்பளம் என்று வரவு வைக்கப்பட்டது என்றால் சரி. ஒவ்வொரு மாதமும் அவருடைய சம்பளம் மாறுபடும் என்றால் சரி. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய மகனின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால்

2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.